அமெரிக்காவில் ஓ.பன்னீர்செல்வம்: தூதரக அதிகாரிகள், தமிழ் அமைப்புகள் உற்சாக வரவேற்பு

சென்னை, நவ. 9–

10 நாள் அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்றுள்ள தமிழக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு இந்திய தூதர அதிகாரிகள், பல்வேறு தமிழ் அமைப்பை சேர்ந்தவர்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

விமான நிலையத்திலும், அவர் தங்கி இருக்கும் ஓட்டலிலும் ஏராளமானபேர் சால்வைகளை அணிவித்து பூங்கொத்து கொடுத்தும் துணை முதலமைச்சரை அன்புடன் வரவேற்றார்கள். வரவேற்புக்கு துணை முதலமைச்சர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

நேற்று அதிகாலை 3.30 மணிக்கு சென்னையிலிருந்து விமானம் மூலம் ஓ.பன்னீர்செல்வம் அமெரிக்கா புறப்பட்டு சென்றார். முன்னதாக அவர் முதலமைச்சரை சந்தித்து வாழ்த்து பெற்றார். அமைச்சர்கள், அண்ணா தி.மு.க. நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டணி கட்சி தலைவர்கள், பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் அவருக்கு பொன்னாடை அணிவித்தும் பூங்கொத்து வழங்கியும் வாழ்த்தினார்கள்.

துணை முதலமைச்சருடன் அவரது மனைவி மற்றும் மகன் ரவீந்திரநாத்குமார் எம்.பி. மற்றும் நிதித்துறை செயலாளர் கிருஷ்ணன் ஆகியோரும் சென்றிருக்கிறார்கள்.

சென்னையிலிருந்து அமெரிக்காவில் உள்ள சிகாகோ நகருக்கு துணை முதலமைச்சர் சென்றடைந்தார். விமான நிலையத்தில் அவரை இந்திய தூதரக அதிகாரி சுதாகர் தலேலா மற்றும் தூதரக அதிகாரிகள் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகளை சேர்ந்தவர்கள் சால்வைகள் அணிவித்து பூங்கொத்து கொடுத்து அன்புடன் வரவேற்றார்கள்.

அமெரிக்காவின் சிகாகோ, ஹூஸ்டன், வாஷிங்டன்டிசி மற்றும் நியூயார்க் உள்ளிட்ட நகரங்களுக்கு சென்று தமிழ்நாட்டிற்கான புதிய திட்டங்களுக்கு தேவையான நிதிகள் பெறுவது குறித்து உலக வங்கியின் தெற்காசிய பிரிவின் உயர் அலுவலர்களுடன் விவாதித்தல், தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகள் திரட்டுவது குறித்து இண்டர்நேஷனல் பைனான்ஸ் கார்பரேஷன் மற்றும் முக்கிய நிதி நிறுவனங்களின் உயர் அதிகாரிகளை சந்தித்தல்,

வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை சார்ந்த திட்டப்பணிகளை பார்வையிடுதல், சிகாகோ நகரில் உள்ள முக்கிய தொழில் முனைவோர்களுடன் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்தல், சிகாகோ தமிழ் சங்கம் சார்பாக நடத்தப்படும் குழந்தைகள் தின நிகழ்ச்சி, குளோபல் கம்யூனிட்டி ஆஸ்கார்ஸ் 2019 விழா மற்றும் இந்தியன் அமெரிக்கன் பிசினஸ் ஒப்பந்தம் மற்றும் அமெரிக்கன் தமிழ் தொழில்முனைவோர் சார்பாக நடத்தப்படும் வட்ட மேசை கருத்தரங்கு உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளில் ஓ.பன்னீர்செல்வம் கலந்து கொள்கிறார்.

இன்று மாலை சிகாகோ தமிழ் சங்கம் சார்பாக நடத்தப்படும் குழந்தைகள் தின நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். 10–ந் தேதி அன்று அமெரிக்கன் மல்டி எத்னிக் கோலிஷன் இங்க் சார்பாக நடத்தப்படும் குளோபல் கம்யூனிட்டி ஆஸ்கார்ஸ் 2019 விழாவில் இன்டர்நேஷனல் ரைசிங் ஸ்டார் ஆப் த இயர் – ஆசியா அவார்ட் என்ற விருது துணை முதலமைச்சருக்கு வழங்கப்பட இருக்கிறது.

12–ந் தேதி அன்று சிகாகோ நகர மேயர் மற்றும் இல்லினாய்ஸ் ஆளுநர் மற்றும் இதர முக்கிய பிரமுகர்களை சந்திக்க திட்டமிட்டுள்ளார். மேலும் குளோபல் கம்யூனிட்டி ஆஸ்கார்ஸ் 2019 விழா மற்றும் இந்தியன் அமெரிக்கன் பிசினஸ் ஒப்பந்தம் மற்றும் அமெரிக்கன் தமிழ் தொழில்முனைவோர் சார்பாக நடத்தப்படும் வட்ட மேசை கருத்தரங்கில் கலந்து கொள்கிறார்.

13–ந் தேதி அன்று துணை முதலமைச்சர் வாஷிங்டன் டிசி செல்கிறார். அங்கு அவர்களுக்கு இந்தியன் அமெரிக்கன் பிசினஸ் ஒப்பந்தம் மற்றும் அமெரிக்கன் மல்டி எத்னிக் கோலிஷன் இங்க்... அமைப்புகளின் சார்பாக வரவேற்பு அளிக்கப்படுகிறது.

தொழில் அதிபர்களுடன் சந்திப்பு

14–ந் தேதி அன்று ஹூஸ்டன் நகருக்கு சென்று தமிழ் அமைப்புகள் சார்பாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அங்குள்ள முக்கிய தொழில் முனைவோர்களிடம் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முதலீடு செய்வது குறித்து கலந்துரையாடுகிறார்.

15–ந் தேதி அன்று ஹூஸ்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கைக்கான எலெக்ட்ரானிக்ஸ் டோனர் போர்டை தொடங்கி வைக்கிறார்.

16–ந் தேதி அன்று நியூயார்க் சென்று இந்தியன் அமெரிக்கன் கம்யூனிட்டி மற்றும் தமிழ் அசோசியேஷன்ஸ் சார்பாக ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். 17–ந்தேதி சென்னை திரும்புகிறார்

பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை: நட்சத்திர ஓட்டல் நிர்வாகிகளுடன் மாசு கட்டுப்பாடு அதிகாரிகள் ஆலோசனை

சென்னை, நவ. 9–

பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளதால் மாற்று பொருட்கள் உபயோகிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்துதமிழ்நாட்டில்உள்ளநட்சத்திர ஓட்டல்களின் பொறியாளர்களுடன் மாசு கட்டுப்பாடு அதிகாரிகள் ஆலோசனை நடத்தி பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்கள்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளதால் மாற்று பொருட்கள் உபயோகிக்க எடுக்கப்பட்ட

பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாட்டினை உருவாக்க ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் விரிப்புகள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தேனீர் கப்புகள், டம்ளர்கள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல்கள், பிளாஸ்டிக் கொடிகள், பிளாஸ்டிக் குடிநீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் கைப்பைகள் (தடிமன் வரைமுறை இல்லாமல்) போன்றவற்றை தயாரிப்பதையும், சேமிப்பதையும், விநியோகிப்பதையும், போக்குவரத்து செய்வதையும், விற்பனை செய்வதையும் 1.1.2019 முதல் தமிழக அரசு தடை செய்து ஆணை பிறப்பித்தது.

இந்த ஆணையினை சீரிய முறையில் நடைமுறைப்படுத்த தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. உணவு விடுதிகள், திருமண மண்டபங்கள், ஜவுளி கடைகள் பேரங்காடிகள், பல்பொருள் அங்காடிகள், வணிகர்கள் சில்லறை வணிகர்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளுக்கு பல்வேறு கூட்டங்கள் நடத்தியும் விழிப்புணர்வு பிரச்சாரங்களை வழங்கியும் தடை அறிவிப்பை திறம் பட செயல்படுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக வாரியம், தமிழ்நாட்டில் உள்ள நட்சத்திர விடுதிகளில் உள்ள தலைமை பொறியாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டத்தை 6–ந்தேதி அன்று நடத்தியது.

தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். வாரியத்தின் உறுப்பினர் செயலர் இக்கூட்டத்திற்கு வருகை புரிந்த பல்வேறு நட்சத்திர விடுதிகளின் பொறியாளர்களையும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய உயர் அதிகாரிகளையும் வரவேற்று உரையாற்றினார்.

மாற்று பொருட்கள்

இக்கலந்துரையாடல் கூட்டத்தில் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருள்களின் தடையினை செயல்படுத்த அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் நிறுவனத்தில் சிறப்பாக செயல்படுத்திவரும் திடக்கழிவு மேலாண்மை குறித்த விளக்கங்கள் அளிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில் நட்சத்திர விடுதிகளின் தலைமை பொறியாளர்கள் குழுமத்தின் துணை தலைவர் மற்றும் லீலா பேலஸ், ஐடிசி ஹோட்டல், தாஜ் கோரமண்டல் மற்றும் ஜி.ஆர்.டி ஹோட்டல்களின் பிரதிநிதிகள் தங்கள் நிறுவனங்களில் தூக்கிஎறியும்பிளாஸ்டிக்பொருட்களை தவிர்த்து மாற்றுப் பொருட்கள் உபயோகிக்க எடுக்கப்பட்ட தற்போதய நடவடிக்கைகள் குறித்தும், திடக்கழிவு மேலாண்மையில் தாங்கள் எடுத்த சிறந்த நடவடிக்கைகள் குறித்தும், சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை பயனுள்ள முறையில் பயன்படுத்துதல் குறித்தும் காட்சி விளக்கவுரைகளை அளித்தனர்.

திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை திறம்பட நிர்வகிப்பது குறித்த தகவல்கள் விவாதித்ததின் மூலம் இக்கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்தது.

அறிவுரைகள்

தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரிய தலைவர் கீழ்கண்ட அறிவுரைகளை செயல்படுத்துமாறு கூறினார்.

- ★ நட்சத்திர விடுதிகளில் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை குறித்து அவர்கள் எடுத்த சிறந்த நடவடிக்கைகளை குறும்படங்களாக தயாரித்தல்.
- ★ பள்ளி குழந்தைகள் மற்றும் சமுதாயத்தில் உள்ள நலிவுற்றவர்களையும் இணைத்து தடை செய்யப்பட்ட தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருள்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும்

தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் அதற்குரிய உகந்த மாற்றுப் பொருட்கள் குறித்த விளக்கப்படங்கள் அடங்கிய கையேடு, சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் மற்றும் விழிப்புணர்வு குறுந்தகடுகளை கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் வாரியத்தலைவர் வழங்கினார்.

மிலாது நபி: கவர்னர் வாழ்த்து

சென்னை, நவ. 9

நாளை (ஞாயிறு) மிலாது நபி. இதையொட்டி இஸ்லாமிய சகோதரி – சகோதரர்களுக்கு இதயப்பூர்வமான வாழ்த்துக்களை கவர்னர் பன்வாரிலால் புரோகித் தெரிவித்துள்ளார்.

நபிகள் நாயகத்தின் போதனைகள் வழி நடந்து, வாழ்க்கையில் அன்பு – பாசம் – பரிவு – கருணையைக் கடைப்பிடித்து, சமுதாய நல்லிணக்கம் காத்து, அமைதி – சமாதானம் – ஒற்றுமை மேம்பாட்டுக்கு செயல்படுவோம் என்று சூளுரைக்க வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு

புதுடெல்லி, நவ. 9–

அயோத்தி வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டதையொட்டி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதே போல் அரசியல் சாசன அமர்வில் இடம்பெற்ற நீதிபதிகள் எஸ்.ஏ.பாப்டே, டி.ஒய்.சந்திரசூட், அசோக் பூஷன் மற்றும் எஸ்.ஏ.நசீர் ஆகியோருக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

TAAL ENTERPRISES LIMITED

Regd. Office : 2nd Floor, WMFDA Towers, 184, Royapettah High Road, Chennai - 600014, Tamil Nadu, INDIA
Phone : +91 44 4350 8393 E-mail : secretarial@taalent.co.in, Web : www.taalent.co.in CIN : L62200TN2014PLC096373

EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND HALF YEAR ENDED SEPTEMBER 30, 2019

(INR in lakhs, except per share data)

Sr. No	Particulars	Quarter ended		Half year ended	Year ended
		30.09.2019	30.09.2018	30.09.2019	31.03.2019
		(Unaudited)			(Audited)
1	Total Income (Net)	3,406.01	4,320.96	7,097.85	15,725.11
2	Net Profit/ (Loss) for the period (before tax, Exceptional items)	763.26	1,231.03	1,807.80	3,529.24
3	Net Profit/ (Loss) for the period before tax (after Exceptional items)	763.26	1,231.03	1,807.80	3,529.24
4	Net Profit/ (Loss) for the period after tax (after Exceptional items)	609.44	1,456.32	1,407.65	2,178.96
5	Total Comprehensive Income for the period [Comprising Profit/ (Loss) for the period (after tax) & Other Comprehensive Income (after tax)]	623.26	1,457.60	1,419.66	2,201.14
6	Paid-up Equity Share Capital (Face value of INR 10/- per share)	311.63	311.63	311.63	311.63
7	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year	-	-	-	4,234.11
8	Earnings per share (of INR 10/- each) Basic and Diluted (INR)	16.49	42.59	36.43	58.20

Notes:

1 Additional information on standalone financial results is as follows: (INR in lakhs)

Particulars	Quarter ended		Half year ended	Year ended
	30.09.2019	30.09.2018	30.09.2019	31.03.2019
Revenue from Operations	154.81	140.23	425.20	782.40
Profit before tax	(35.93)	582.75	9.49	1,236.00
Profit after tax	(27.02)	582.75	9.49	1,236.00

2 The above is an extract of the detailed format of the quarterly Consolidated Financial Results filed with Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. Full format of the Standalone & Consolidated Financial Results are available on Stock Exchange website (www.bseindia.com) and also on Company's website (www.taalent.co.in).

3 The above results have been prepared in accordance with Companies (Indian Accounting Standards) Rules, 2015 (Ind AS) to the extent applicable.

4 The above results have been reviewed by the Audit Committee & approved by the Board of Directors at their respective meetings held on November 7, 2019.

For TAAL Enterprises Limited

Place : Pune
Date : November 7, 2019

Salil Taneja
Whole Time Director

தமிழ்நாடு அரசு

இந்து சமய அறநிலையத்துறை

தொடர்பு அலுவலர் இந்து சமய அறநிலையத்துறை, சென்னை -34-ன் சார்பில்

46-வது இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தக தொழிற் பொருட்காட்சி 2019 - 2020 அரங்கு அமைக்க

ந.க.எண்.[illegible]/2018/[illegible] **குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** (Short term Tender Notice) நாள்: 08.11.2019

சென்னை, தீவுத்திடலில் (போர் நினைவுச் சின்னம் எதிரில்) நடைபெறவிருக்கும் சுற்றுலா மற்றும் வர்த்தக பொருட்காட்சி 2019-2020-க்கு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் அமைக்கப்படவிருக்கும் அரங்கு நிர்மாண வேலைகளுக்கு, சுற்றுலாத் துறையால் அங்கீகாரம் பெற்ற, முன் அனுபவம் வாய்ந்த மற்றும் பரிசுகள் பெற்ற இந்து சமயத்தைச் சார்ந்த குறைந்தது 10 வருடங்கள் இத்தொழில் மேற்கொண்டு அனுபவமுள்ள மற்றும் மத்திய / மாநில அரசு பொருட்காட்சியில் அரங்கு அமைத்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அதற்கான சான்றுகளுடன் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நிபந்தனைகளுக்குட்பட்டு வரவேற்கப்படுகின்றன.

வேலையின் உத்தேச மதிப்பு தொகை - ரூ. 24,16,408/-
டெண்டர் படிவத்தின் விலை - ரூ. 6,000/- + GST 18% = 7,100/-
முன் வைப்புத் தொகை - ரூ. 24,200/-
பணிக்காலம் - 10 நாட்கள் (வேலை ஒப்படைப்பு உத்தரவு நாளிலிருந்து)

டெண்டர் படிவங்கள் இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை - 34, அலுவலகத்திலிருந்து அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் 14.11.2019 வரை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் படிவங்கள் 15.11.2019 அன்று நண்பகல் 3.00 மணி வரையில் பெற்றுக் கொள்ளப்படும். உடனே பிற்பகல் 4.30 மணியளவில் வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள், இணை ஆணையர் மற்றும் அலுவலர் முன்னிலையில் திறந்து ஒப்பந்தப்புள்ளிகளுக்கான சட்டவிதியின் படி பதிவு செய்யப்படும். இதர விவரங்கள் அலுவலகத்தில் வேலை நாட்களில் வந்து தெரிந்து கொள்ளலாம். செ.ம.தொ.இ./177/ஒப்பந்தப்புள்ளி/2019 இணை ஆணையர்

மாங்காடு பேரூராட்சி

காஞ்சிபுரம் மாவட்டம்.

ந.க.எண்.13/2019/அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை** நாள்: 28.10.2019

1998-ம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும்

மாங்காடு பேரூராட்சிக்குரிய அதன் சார்பாகவும் பொது நிதி பணிகள் 2019-20 ஆம் ஆண்டின் கீழ் பணிகள் செய்ய கீழ்குறிப்பிட்ட விவரத்தில் கண்டுள்ளபடி செய்து முடிக்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து 27.11.2019-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகார நேரத்தின் படி) செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் அன்று பிற்பகல் 3.30 மணி அளவில் அப்போது வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறக்கப்படும். பணி தொடர்பான இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம்.

1	ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற கடைசி நாள்	:	விளம்பர தேதி முதல் 26.11.2019 அன்று மாலை 3.00 மணி வரை உரிய தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேலும் ரூ.10.00 லட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்கு மட்டும் http://townpanchayats.tn.gov.in/tender www.tenders.tn.gov.in என்ற முகவரியில் இறக்கம் செய்யலாம்.
2	முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய கடைசி நாள்	:	26.11.2019 அன்று மாலை 5.00 மணிக்குள் இப்பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும்.

பணிகளின் விவரம்

வ. எண்	பணியின் பெயர்	எண்ணிக்கை	பணிகளின் மொத்த மதிப்பீடு தொகை (லட்சத்தில்)	காப்புறுதி தொகை (ரூபாய்)	ஒப்பந்தப்புள்ளி படிவ விலை (ரூபாய்)	பணி முடிக்க வேண்டிய கால அளவு
1	2	3	4	5	6	7
1	தார்சாலை	7	109.20	1%	ரூ.0.10 லட்சத்திற்கு மேல் ரூ.2.00 லட்சம் வரை ரூ.690/- ரூ.2.00 லட்சத்திற்கு மேல் ரூ.5.00 லட்சம் வரை ரூ.1650/- ரூ.5.00 லட்சத்திற்கு மேல் ரூ.10.00 லட்சம் வரை ரூ.3250/- ரூ.10.00 லட்சத்திற்கு மேல் ரூ.25.00 லட்சம் வரை ரூ.6720/- ரூ.25.00 லட்சத்திற்கு மேல் ரூ.10080/-	30 நாட்கள்
2	பேவர் பிளாக் சாலை	3	30.15	1%		30 நாட்கள்
3	மெட்டல் சாலை	3	30.90	1%		30 நாட்கள்
4	மழைநீர் வடிகால்	1	6.45	1%		90 நாட்கள்
5	இதரப்பணிகள்	4	10.25	1%		30 நாட்கள்
	மொத்தம்	18	180.95			

இடம் : மாங்காடு பேரூராட்சி
நாள் : 28.10.2019

செ.ம.தொ.இ.4 [illegible]

செயல் அலுவலர்,
மாங்காடு சிறப்பு நிலை பேரூராட்சி.

Before the Court of XVI Asst City Civil Judge Chennai
O.S. No 3218 - 2019

Syndicate Bank
Represented by its
Branch Manager, Velachery
-Plaintiff

Vs

Elangovan and Sreeja
-Defendant

To
D1. Elangovan,
11/8, Parameswaran street,
Velachery, Chennai-42
D2. Sreeja, W/o. Elangovan
11/8, Parameswaran street,
Velachery, Chennai-42

Please take notice that the above plaintiff has filed a suit against you for the recovery of a sum of rupees 3,38,988 with interest and costs. The Honorable XVI Asst city civil judge has ordered summons to you in the suit. The case is coming on 28-11-2019. Kindly make it convenient to attend the court on the date failing which the matter will be decided in your absence.

V.Jayanandakumar,
Advocate, Chennai

IN THE COURT OF THE V ASST. CITY CIVIL JUDGE AT CHENNAI
O.S. No. 4401 of 2019

Indian Bank, Alwarpet Branch
... Plaintiff

Vs

Mr.N.G. Shyamkumar
Proprietor of Trend Saloon
... Defendant

To,
Mr.N.G. Shyamkumar
Proprietor of Trend Saloon
Old No. 10, New No. 168,
"Quantagara" Eldams Road,
Teynampet, Chennai-600 018

Please take notice that in the above case the learned V ASST. CITY CIVIL JUDGE AT CHENNAI was pleased to order notice to you on 05.11.2019 returnable by 11.12.2019. Kindly be present before the Hon'ble Court on 11.12.2019 failing which the case will be decided in your absence.

L. RAMKUMAR
K. GANAPATHY
Counsel for Plaintiff

IDFC
IDFC LIMITED

ஐடிஎப்சி லிமிடெட்

பதிவு அலுவலகம்: 4வது மாடி, கேபிடல் டவர், 555, அண்ணா சாலை, திருவிக குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை 600 018
கார்பொரேட் அலுவலகம்: நாமன் சேம்பர்ஸ், C-32, G-பிளாக், பந்த்ரா-குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா(E), மும்பை-400 051.
CIN: L65191TN1997PLC037415

30 செப்டம்பர் 2019–ல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	முடிந்த அரையாண்டு	முடிந்த காலாண்டு	
		செப்.30, 2019	செப்.30, 2019	செப்.30, 2018
		தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது	தணிக்கை செய்யாதது (குறிப்பு 2ஐ பார்க்க)
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	176.14	57.89	218.32
2	வரி, விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்களுக்கு முன் நிகர லாபம்	73.80	(1.21)	187.98
3	வரிக்கு முன் மற்றும் விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்கள் மற்றும் அசோசியேட்ஸ் பங்கு லாபம்/(நஷ்டம்) மற்றும் கூட்டு நிறுவனத்திற்கு பின் நிகர லாபம்	(347.47)	(370.92)	109.70
4	வரி, விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்களுக்கு பின் நிகர லாபம்	(378.36)	(375.94)	97.64
5	மொத்த விரிவான வருமானம்	(511.98)	(284.85)	92.66
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10/–)	1596.36	1596.36	1596.36
7	கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளபடி மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக ரிசர்வுகள்	(31.03.2019 அன்று) 8788.45		
8	காலத்திற்கான ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10/–) (தொடரும் மற்றும் தொடராத செயல்பாடுகள்) – வருடாந்திரம் அல்ல			
	– அடிப்படை (ரூ.)	(2.57)	(2.55)	0.67
	– பலமிழந்தது (ரூ.)	(2.57)	(2.55)	0.67

குறிப்புகள்:

1. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015, விதி 52–ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. அரையாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் கம்பெனியின் இணைய தளம் (www.idfc.com) மற்றும் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளங்கள் (www.nseindia.com மற்றும் www.bseindia.com)–ல் கிடைக்கும்.
2. இண்ட் ஏஎஸ்–ன் படி ஒப்பீடு நோக்கிற்காக செப்டம்பர் 30, 2019 ல் முடிந்த காலாண்டுக்கான கணக்குகள் நிர்வாகத்தால் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. இது குறுகிய மறுபரிசீலனை செய்யப்படவில்லை.
3. மேற்கண்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு நவம்பர் 8, 2019 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. செப்டம்பர் 30, 2019ல் முடிந்த காலாண்டுக்கான ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளை கம்பெனியின் சட்ட தணிக்கையாளர்கள் தணிக்கை செய்துள்ளனர்.

ஐடிஎப்சி லிமிடெட் குழுவின் சார்பாக
ஒப்பம்/–
சுனில் காகர்
நிர்வாக இயக்குனர் & தலைமை செயல் அதிகாரி

இடம்: மும்பை
தேதி: நவம்பர் 08, 2019

---

equitas

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 410'A', 4வதுமாடி, ஸ்பென்ஸர் ப்ளாசா, ஃபேஸ் II, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 2
CIN: L65100TN2007PLC064069 | Ph: 044 4299 5000 | www.equitas.in

செப்டம்பர் 30, 2019 வரை முடிவடைந்த மூன்று மாத மற்றும் அரையாண்டிற்கான தனிப்பட்ட மற்றும் ஒட்டு மொத்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(₹ லட்சத்தில்)

வ. எண்	விவரங்கள்	தனிப்பட்ட முடிவுகள்				ஒட்டு மொத்த முடிவுகள்			
		முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2019	முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2018	முடிவடைந்த அரையாண்டு 30 செப் 2019	முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2019	முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2019	முடிவடைந்த மூன்று மாதங்கள் 30 செப் 2018	முடிவடைந்த அரையாண்டு 30 செப் 2019	முடிவடைந்த ஆண்டு 31 மார்ச் 2019
		தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்படாதது	தணிக்கை செய்யப்பட்டது
1	செயலாக்கங்களிருந்து மொத்த வருமானம்	441.98	509.28	995.19	2,251.86	70,481.19	59,168.06	136,985.39	235,853.11
2	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரி, மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்கு முன்	271.76	353.37	710.28	1,271.92	8,738.67	7,970.17	19,524.96	27,131.16
3	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரிக்கு முன் மற்றும் வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின்	271.76	353.37	710.28	1,271.92	8,738.67	7,970.17	19,524.96	27,131.16
4	இக்காலம் / ஆண்டுக்குரிய நிகர இலாபம் வரி, வழக்கத்திற்கு மாறான / அசாதாரண வகைகளுக்குப் பின்	144.43	262.64	478.84	933.24	4,125.19	5,174.07	11,152.78	17,657.40
5	இக்காலம் / ஆண்டுக்குரிய (வரிக்குப்பின்) மொத்த விரிவான வருமானம் (உள்ளடக்கிய லாபம்) மற்றும் இதர வருமானம் (வரிக்குபின்)	144.45	262.53	478.93	933.76	4,143.27	5,132.08	11,207.34	17,697.34
6	சமபங்கு மூலதனம்	34,174.32	34,113.96	34,174.32	34,146.15	34,174.32	34,113.96	34,174.32	34,146.15
7	இதர சமபங்கு	–	–	–	146,010.01	–	–	–	210,223.92
8	தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட செயலாக்கங்கள் ஈட்டிய பங்கு ஒன்றுக்கான வருவாய் – வருடாந்திரம் அல்ல								
(i)	அடிப்படை (₹)	0.04	0.08	0.14	0.27	1.21	1.52	3.26	5.18
(ii)	குறைமதிப்பு (₹)	0.04	0.08	0.14	0.27	1.20	1.51	3.25	5.18

குறிப்பு: மேற்குறிப்படப்பட்டவைகள் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015-ன், விதி 33-ன் படி பங்கு வர்த்தக நிறுவனத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று மாதங்கள் / அரையாண்டிற்கான முழுவடிவிலான நிதிநிலை முடிவுகளின் சுருக்கப்பட்ட வடிவம் ஆகும். மூன்று மாதங்கள் / அரையாண்டிற்கான நிதிநிலை முடிவுகளின் முழு படிவமும் நிறுவனத்தின் **www.equitas.in** என்ற இணையதளத்திலும், பங்குவர்த்தக நிறுவனத்தின் **www.nseindia.com, www.bseindia.com** என்ற இணையதளங்களிலும் காணலாம்.

இயக்குனர்கள் குழு சார்பாக
ஸ்ரீ. ஜான் அலெக்ஸ்
செயல் இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி

இடம் : சென்னை
தேதி : 08 நவம்பர் 2019